Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR**
**Case No. CC.NO. 442/2025**

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No. 4 Page. No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. இராஜா | **தொழில்** | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. ஆஞ்சி | **கிராமம்/ஊர்** | கந்திலி |
| **வயது** | 53 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 13th day of July 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை.-</u>**

நான் தற்போது கந்திலி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு இதே காவல் நிலையத்தில் பணியாற்றிய காவல் உதவி ஆய்வாளர் திரு.ரூகன் பணிமாறுதல் பெற்று சென்று விட்டதால், அவரின் கையெழுத்துகள் எனக்கு நன்கு பரீட்சயம் என்பதால் நான் இவ்வழக்கில் கோப்புகள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். காவல் உதவி ஆய்வாளர் திரு. ரூகன் அவர்கள், கடந்த 09.04.2025 அன்று காலை 18.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, கம்சலா என்பவர் நிலையம் சேர்ந்து கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண். 88/2025, BNS பிரிவுகள் 296(b), 351(3) & 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னர் 10.04.2025 ஆம் தேதியில் காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மூர்த்தி மற்றும் கஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே என்னால் அ.சா.ஆ.3,4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** பின்னர் அன்றைய தினமே காலை 08.00 மணிக்கு சம்பவயிடத்தில் இருந்து மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் நேரடி சாட்சி சாம்ராஜ்

வெட்டுக்கத்தியை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். **(அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ 5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான வெட்டுக்கத்தியை படிவம் – 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **(அந்த படிவம் – 91 அ.சா.ஆ 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. பின்பு இவ்வழக்கின் எதிரியை 14.04.2025 அன்று பகல் 14.00 மணியளவில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் தனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது BNS பிரிவுகள் 296(b), 351(3) & 4 of TNPHW Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்திலேயே வைத்து தயாரித்து எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Signature of Witness

Judicial Magistrate No.II
Tirupathur.